**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

Case No.CC.15/2023
Prosecution witness.06

| | |
|---|---|
| பெயர் : திரு.ராஜாராம்பாண்டியன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of March 2024.

18.03.2024

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :**

**1)** நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 28.08.2022ம் தேதி 14.00 மணிக்கு நான் கீழத்தூவல் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது செல்வநாயகபுரம் கிராமத்தை சேர்ந்த லெட்சுமி, க.பெ.மணிமாறன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்றேன்.

**2)** புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.120/2022 இதச பிரிவுகள் 279, 304(A)—ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). முதல்தகவல் அறிக்கையையும், புகார் மனுவை முதுகுளத்தூர் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியும், மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடமும் சமர்ப்பித்தேன். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கு சம்பவம் நடைபெற்று புகார் எப்போது பெறப்பட்டது என்றால் 02.00 மணிக்கு பெறப்பட்டது. புகார் அளித்த அசா.1க்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முதல்தகவல் அறிக்கை காலம் 14ல் புகார்

அளித்தவரிடம் இலவச நகல் கொடுக்கப்பட்டு கையொப்பம் பெறவேண்டும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதை மறைத்து விபத்து காப்பீடு பெறவேண்டும் என்பதற்காக அசா.1 கொடுத்த பொய்யான புகாரை முறையாக விசாரிக்காமல் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.